1) பணவீக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், விலை ஏற்றத்தை தவிர்க்கவும், மற்றும் வரி நிர்வாகம் ஏழை எளிய மக்களை பாதிக்காதவாறு இருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இந்த அரசு கீழ் கண்ட அத்தியாவசிய பொருட்களுக்கு 01-07-2007 முதல் மதிப்புக் கூடுதல் வரியின் கீழ் முழு வரி விலக்கு அளித்துள்ளது.

(i) சமையல் எண்ணெய்

(ii) நியாய விலைக் கடையில் வழங்கப்படும் மண்ணெண்ணை

(iii) அலுமினியப் பாத்திரங்கள்

(iv) புளி, மிளகாய், தனியா, மஞ்சள், பெருங்காயம், மசாலா பவுடர், சீயக்காய், சேமியா

(v) ரூ200க்கு கீழ் விற்கப்படும் காலணிகள்

(vi) சாம்பிராணி, கற்பூரம், ஊதுபத்தி, விபூதி, சந்தனம், நாமக்கட்டி, பிரசாதங்கள்

(vii) சூரிய அடுப்பு

(viii) ஜமக்காளம்

(ix) கை பம்புகள்

(x) தீப்பெட்டி

(xi) மண்ணெண்ணை அடுப்பு, விளக்கு

(xii) பேனா, பென்சில், முதலிய எழுது பொருட்கள்

இது போன்று மொத்தம் 30 மிக அத்தியாவசியப் பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கீழ் கண்ட பொருட்களுக்கு வரிக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது

1) சமையல் எரிவாயு 4 சதவிகிதத்திலிருந்து 1 %
2) ஓட்டல் மற்றும் உணவகங்களில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கு 12.5 சதவிகிதத்திலிருந்து 2%
3) நெய், பேரிச்சம்பழம் 12.5 சதவிகிதத்திலிருந்து 4%
4) மாவு அரைக்கும் இயந்திரங்கள் (Wet Grinders) 12.5 சதவிகிதத்திலிருந்து 4%
5) பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் வணிகச் சின்னமில்லாத ஸ்டீல் பர்னிச்சர்கள் 12.5 சதவிகிதத்திலிருந்து 4%
6) பெட்ரோல் மற்றும் டீசல் 20 சதவிகிதத்திலிருந்து 12.5 %.
7) தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் சிப்பமிடும் பொருட்கள் 4% சதவிகிதத்திலிருந்து 1 %.
8) தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் 1% சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.
9) இரு சக்கர வாகனங்கள் 12.5% சதவிகிதத்திலிருந்து 4%.

10) டயர் மற்றும் டியூபுகள் 12.5% சதவிகிதத்திலிருந்து ~~4%~~. 8 %

11) அனைத்து வகையான நூல்கள் 4% சதவிகிதத்திலிருந்து 1%.

12) மருத்துவக் கருவிகள் 4% சதவிகிதத்திலிருந்து 2%.

13) அனைத்து வகையான கட்டிடப்பொருட்கள் 12.5% சதவிகிதத்திலிருந்து 8%.

14) விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் பிளாஸ்டிக் பைப்புகள் 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதம்.

மேற்கண்ட வரிச்சலுகையினால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய கீழ்கண்ட பொருட்கள் வரி விதிப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளது

1) சாராயம் 15 சதவிகிதம்
2) சிகரெட் 12.5 சதவிகிதம்

கடந்த நிதிநிலை அறிக்கையில் கூறியது போல், மதுபானங்களுக்கு விற்பனை வரிக்கு பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை நடைமுறைப் படுத்தப்படுகிறது.

மாசற்ற தொழிற்சாலைகளை கொண்டு வருவதிலும், நிலத்தடி நீரை பாதுகாப்பதிலும் இந்த அரசு முழு கவனம் செலுத்துகிறது. இதற்காக காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் இயந்திரங்களுக்கு (wind mill) முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினால் அனைத்து பொதுமக்களும், தொழிற் சாலைகளும், வியாபாரிகளும் பயனடைவார்கள்.